**MARG Projects and Infrastructure Limited**

**17th November, 2023**

**To**
**BSE LIMITED**
**CORPORATE RELATIONSHIP DEPARTMENT**
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street, Mumbai- 400 001.

**Scrip Code -513648 –MARG PROJECTS AND INFRASTRUCTURE LIMITED**

**Dear Sir/Madam,**

**SUB: Submission of Newspaper clippings for publishing the Un-Audited Standalone Financial Results for the Quarter and Half Year Ended 30th September 2023.**

**Ref: Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015**

Pursuant to Regulation 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations 2015, we have published the Un-Audited Standalone Financial Results for the Quarter and Half Year ended 30th September 2023 in the Trinity Mirror (English Newspaper) and Makkal Kural (Tamil Newspaper) on 16th November 2023. Enclosing the copies of the advertisement published.

This is for your Information and Records.

Thanking you,

Yours truly,

**For MARG PROJECTS AND INFRASTRUCTURE LIMITED**

SELVAPA
NDI

Digitally signed by SELVAPANDI
DN: c=IN, o=PERSONAL,
pseudonym=37b46358df4bb2fde99ce387516777c2,
2.5.4.20=6C1BCD8132E7EC235D1D9B218D44B18C72
03EB6FF27C346213E7F4C98B123CBD,
postalCode=600054, st=TAMIL NADU,
serialNumber=eea6d640bbf963a11ffd9a1f903ed10e
b1a3ce1b1313412f06803ecf1555e560,
cn=SELVAPANDI
Date: 2023.11.17 11:18:48 +05'30'

**SELVAPANDI**
**DIRECTOR**
**DIN: 08709432**



The marriage of R. Raksha (Daughter of V. Ramachandran, Reporter, Makkal Kural and Rajamalar) with G. Duraipandian (son of Gunendran and Rajakumari) held at Anbu Mahal in Kumbakonam. V.A. Jagafar Sadiq, Founder, Asika Thanga Maligai, Rahamatullah, Sakottai Anbazhagan, MLA, Tamil Azhagan, Deputy Mayor, A.K. Sitharanjan, Director, Makkal Kural and Nagai Babu blessed the newly weds.



# Apollo Shine Foundation's initiative on road safety awareness

Chennai, Nov 16: In an effort to raise awareness on road safety and protect children from road accidents, Thiru P.K. Sekar Babu, Minister for Hindu Religious & Charitable Endowments, participated in the last day of the "Helmets For Kids" campaign today. The campaign is a special initiative by the Apollo Shine Foundation, a campus health non-profit dedicated to the health and safety of children in schools and colleges. Harshad Reddy, Director, Apollo Shine Foundation and Dr Upendra Kinjawadekar, National President – Indian Academy of Pediatrics were present at the event, organized as part of Children's day celebrations.


The Foundation launched the campaign on World Trauma Day in light of the rise in the number of road accidents and the evolving discourse on road safety and trauma-related injuries. The campaign, centred on the slogan 'No Excuse OK, Wear A Helmet', calls upon children to become aware of the protection a helmet can offer and to always wear a helmet when riding a two-wheeler.

As part of this effort, a team from the Apollo Shine Foundation visited a host of schools, gifted students with child helmets and held educative sessions to raise awareness around the cause. Poster-making contests were also organized to encourage students to get creative about themes such as road safety, protection from trauma-related head injuries and the importance of wearing a helmet.

Harshad Reddy, Director, Apollo Shine Foundation, said, "The Apollo Shine Foundation is pleased to launch the Helmets For Kids initiative to promote road safety among children.Children are our future – this awareness drive is an attempt to encourage children to become more sensitized and adopt simple yet significant life-saving measures as part of their commute. Wearing a helmet can reduce the risk of head injury by 85% – we have attempted to bring together a range of stakeholders such as parents, teachers, students, physicians and government to deliver this messageand create an impact that can be felt at the individual and community levels."

# DGP inaugurates Neuberg Diagnostics diabetes health camp for cops

Chennai Nov 16: Neuberg Diagnostics India's largest diagnosing healthcare chain of with more than 150 labs and 2000+ collection centres and having a presence in India, South Africa, UAE and the USA launched its newest mobile wellness unit "WOW" (Wellness on the wheels) in partnership with Trivitron Healthcare in Chennai. The mobile clinic was inaugurated by Shri Shankar Jiwal IPS, Director General of Police Tamil Nadu; in the presence of Dr GSK Velu, Chairman and Managing Director Neuberg Diagnostics and Mr Ganesan, Vice-Chairman, Neuberg Diagnostics. Also he flagged off the Diabetes health camp organised by Neuberg Diagnostics for the police personnel and their family members between 14th Nov till 1st Dec 2023 at the police quarters across the Chennai City Limits.



The Wellness on the wheels "WOW" mobile unit has been specially customized and equipped with advanced diagnostic tools, such as USG, ECG, X Ray, Pulmonary function tests(PFTs), Audiometry Exam, Eye Check, Blood Sample Collection and Doctor Consultation. The 25 feet long, specially designed spacious wellness container has a diagnostic centre and a chemical toilet fitted with air conditioners and is independently powered by the on-board generator and inverter. The vehicle is provided with canopies and chairs for patients in-waiting."This is the largest diabetes screening camp which is being conducted for the police force and family members in Chennai." Shankar Jiwal IPS, Director General of Police said

" With advanced diagnostic tools and expert healthcare professionals, 'Wellness on the Wheels' is the embodiment of accessible, quality care Diabetes is creating a great havoc to our society, we are happy to organize this diabetic health camp for our State Superheroes. In general Policemen do not have a regular time schedule. They have to work more than the normal hours every day which leads to irregular and unhealthy eating habits." Said Dr GSK Velu, Chairman and Managing Director Neuberg Diagnostics.

# RCM donates medical equipment to Kanchi Kamakoti Childs Trust Hospital

Chennai, Nov 16: The Rotary Club of Madras (RCM), through a CSR grant from Raj Petro Specialities Private Limited and Raj Charitable Foundation, donated medical equipment worth Rs. 18 lakhs to Kanchi Kamakoti CHILDS Trust Hospital today.

The 35 bed Neonatal ICU (NICU) of Kanchi Kamakoti CHILDS Trust Hospital, headed by Dr. N. Chandrakumar, is one of the oldest NICUs in the country. It caters to newborn babies from the city of Chennai, rest of Tamil Nadu, southern Andhra Pradesh and neighbouring states. Since this NICU is a level IV referral unit, we receive very sick newborns who require the maximum level of life support. One such condition which requires advanced life support is persistent pulmonary hypertension in newborn (PPHN) wherein the blood pressure in the lungs does not fall after birth, as expected. As a result, the baby struggles to breathe because blood cannot pickup oxygen in the lungs. This can lead to failure of multiple organs in the body and eventually death of the baby if not treated in time. One of the modalities available to treat PPHN is Inhaled Nitric oxide (iNO). This is a gas delivered through the ventilator which causes the blood pressure in the lungs to fall and thus improves oxygen delivery to the body.

# Sai Silks Kalamandir opens Kancheepuram Varamahalakshmi Silks store in Poonamalle

Chennai, Nov 16: Ethnic apparel retailer Sai Silks Kalamandir Ltd (SSKL) has launched its 57th store under Kancheepuram Varamahalakshmi Silks format in Poonamalle, Chennai.

The newly inaugurated store by actress Khushboo Sundaris 4th store in Chennai and the 7th store in Tamil Nadu. The store offers premium ethnic sarees & handlooms for wedding & occasion wear. The product portfolio comprises premium sarees such as Banarasi, Patola, Kota, Paithani, Organza, Kuppadam, and Kancheepuram silk sarees. With a strong presence in Andhra Pradesh, Telangana, Karnataka, and Tamil Nadu, the company offers a diverse range of products including ultra-premium and premium sarees, lehengas, and men and children's ethnic wear. Prasad Chalavadi, CMD, Sai Silks Kalamandir Ltd said, "We are delighted to open 7th store in



Tamil Nadu and 4th store in Chennai. This shows our commitment to Chennai and rest of Tamil Nadu for delivering much needed growth by expanding our presence in ever growing ethnic wear market in Tamil Nadu.

In order to support our growth strategy, we intend to further penetrate in Chennai like we did in Telangana and we will build large warehousing facility as we open more number of stores to support our growth in Chennai and rest of Tamil Nadu. No best time to open stores than today as the festivals time is around and the spending on ethnic wear is very high during Diwali, Christmas to Sankranti in Tamil Nadu."

## Advertising Club Madras launches diploma course

Chennai, Nov 16: Advertising Club Madras, a premier and one of the oldest associations for advertising professionals in India, has launched its revamped Post Graduate Diploma in Advertising (PGDA) for 2023-24 academic year, with the new syllabus focusing on the latest trends, technologies, and strategies that are shaping the advertising industry.

This part time course, which has been a fountainhead of advertising talent since 1994, is designed for a duration of 3 months, with 20 hours per month. The PGDA course for 2023-24 will kickstart on December 2, 2023 and will conclude by mid-March 2024. Enrollments are open for all individuals from November 10, 2023 onwards. The last date to apply is November 25, 2023.

The classes will be conducted on Saturdays and Sundays for a duration of 2.5 hours per day. PGDA is ideal for students who want to get jobs in advertising, digital marketing, and Public Relations agencies, besides media houses. The modules will be conducted by who's who from the advertising and media industry.

S. Balasubramanian, President, said that the highlight of the course is that it features an industry-relevant curriculum that focuses on latest trends, technologies, and strategies shaping the advertising industry. "This will help our students to leverage the strengths of online and social media to maximise the reach of their advertising campaigns."


**NAME CHANGE AND DATE OF BIRTH NOTICE**

I, **B. KALPANA W/O BASKARAN BALAKRISHNAN,** residing at No.55, Ezhil Nagar, Salamedu, Villupuram, Villupuram District- Tamil Nadu, Pin 605 602, Date of Birth 04.10.1968, Place of Birth Villupuram, Tamil Nadu hereafter called as **VIJAYALAKSHMI** W/O **BASKARAN BALAKRISHNAN.**

**B. KALPANA**

**AUCTION**

**AUCTION ON: FRID 17.11.2023 at 3 P. AUCTION WILL BE HELD OFFICE OF THE MORTGAGE FINANCIER at Samy & Sa Associates, No.1/35, Ha dass Main Road, Kolath Chennai-600099. Auction Registered Mortgage Property of Land & Buildi at Door No.12, Pillaiyar K Street, Paruthipattu Villag Avadi, Chennai - 6000 One Part of the North Si Property 1450 Sq.ft. w Building.**

**MORTGAGOR / OWNER Mr.V. Prakash S/o. Mr.A Viswanathan Residing above Mortgaged Proepr**

**Refundable Entrance fe Rs. 10,000/- per head cash EMD: 25% of t accepted bid value on t spot. For terms conditions contact,**

**-: AUCTIONEERS :-**

**M/s. VARMA & CO**
**New No.25, Flowers Road**
**Chennai : 600 084.**
**Cell No. 9840116302**

**PUBLIC NOTICE**

This is to inform the general public that my client Mrs. C.Sobha Raja wife of C.Vaikunta Raja. Aged 70 years, residing at No.Y-94, 8th Street, Anna nagar, Chennai-600040, Instructed me to give the following public notice. That my Clients Mrs. C.Sobha Raja wife of C.Vaikunta Raja, her the absolute owner of the Plots No.14 (Part) and 15, Comprised in Survey No.139/ 1A1A1 situated at Nolambur Village. Ambattur Taluk (Now Maduravoyal Taluk), Thiruvallur District, Registration Dis trict of North Chennai, she having purchased by way of following Sale Deeds. 1.Document No.21/1995, Power of attorney Dated: 13.01.1995 2. Document No.3253/1996, Registered Dated 8.07.1996 3. Document No.3255/1996, Registered Dated: 08/07/1996 At Sub Registrar office Konnur, Chennai While my client came to near koyambedu bus stand by a car along with the original Deeds, on that day 02-10-2023 Due to heavy traffic car was moved inch by inch suddenly she was found that , she had last a bag contained original Deeds above mentioned. My client took all efforts to trace the original Sale Deeds and all efforts to trace are in vain. If anybody is having possession of the said Docu ments or Come across with the said documents, shall hand over the same to me or to my client within 7days from the date of publishing of this notice. If anybody deals with the above property, by taking advantage of the said missing document, that would be presumed to be done at his won risk and any act done so would not bind on my client and his legal heirs and the same will give rise to civil and criminal consequences

**P.Tharika BBA.LLB., (HONS), Advocate,**
**No.79, Arcot Road, Valasaravakkam Chennai-600087. Cell: 9789551323.**

**PUBLIC NOTICE**

The General Public is hereby informed that on our Client behalf Mr.Sudhakar, son of Venkatrayulu Achari(late), resident of No, 2.Beri Street, Pallipattu, Tiruvallur district 631207, the immoveable properties like agricultural lands and two House sites at Pallipattu Village, Tiruvallur District, comprised in survey Nos.177/12 (82cents),177/6A (28cents), 188/2 (26 cents), and 188/3 (24cents) and other landed and including superstructure properties situated at Pallippattu, are belongs to Venkatrayulu Achari(late), who is the father of our client and other legal heirs, after the death of the said Venkatrayulu Achari(late), our client and other legal heirs enjoying the said properties and the partition also not done. In the said circumstances other legal heirs of Venkatrayulu Achari (late), secretly taking steps to disposethe said properties, and they are not the original owners and also not self acquired property, so its inform to the public that not to deal with the said properties in any manner by way of sale or agreement, mortgage and other deeds and transactions. The said sale transactions or negotiations dealt with any 3rd parties are not binding upon our client rights over the said properties and the said transactions are invalid and unlawful, since its joint family property and not at all self acquired properties.

**V.SIVALINGAM,**
ADVOCATE
M/s.SIVA ASSOCIATE
ADVOCATES
32/1, SADAYAPPAN STREET,
MANDAVELI, CHENNAI-600028.
Ph: 9840329186, 9444583186,
email} ariyasiva1975@gmail.com

**MARG PROJECTS & INFRASTRUCTURE LIMITED**

CIN:L65991TN1993PLC025252
Regd. Office: Sri Sai Subhodhaya Apartments, Basement No.57/2B, East Coast Road, Thiruvanmiyur, Chennai 600041
Phone No: +917825888141 | Email ID : mpil@marggroup.com | Website: www.margprojects.com

**EXTRACT OF UNAUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED 30 SEPTEMBER 2023**

(Amount in Lakhs)

| Sr. No. | Particulars | STANDALONE | | |
|---|---|---|---|---|
| | | 3 Months ended 30/09/2023 | Corresponding 3 months ended 30/09/2022 in the previous year | Previous Year ending 31/03/2023 |
| 1 | Total Income from Operations | - | - | - |
| 2 | Net Profit for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | (1.28) | (1.32) | (4.11) |
| 3 | Net Profit for the period before tax (after Exceptional and/or Extraordinary items) | (1.28) | (1.32) | (4.11) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | (1.28) | (1.32) | (4.11) |
| 5 | Total Comprehensive Income / (Loss) for the period [ Comprising Profit/(Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) ] | (1.28) | (1.32) | (4.11) |
| 6 | Equity Share Capital | 544.50 | 544.50 | 544.50 |
| 7 | Other Equity as shown in the Audited Balance Sheet of current year | 1,021.04 | 1,025.04 | 1,023.15 |
| 8 | Earning per Share (of Rs. 10 each) | | | |
| | (a) Basic (Rs.) | (0.04) | (0.02) | (0.08) |
| | (b) Diluted (Rs.) | (0.04) | (0.02) | (0.08) |

**Notes:** The above is an extract of the detailed format of Unaudited Standalone filed with BSE under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Unaudited Standalone Financial Results are available on the websites of BSE (www.bseindia.com) and Company (www.margprojects.com).

Place : Chennai
Date : 15-11-2023

**For Marg Projects and Infrastructure Limited**
**SELVAPANDI**
CHAIRMAN
DIN No: 08709432

**RAMANATHAPURAM SAMASTHANAM DEVASTHANAM**
**Arulmigu Naganathaswamy Temple**
Nainarkovil, Paramakudi Taluk, Ramanathapuram District.

சுதந்திர திருநாள் அமுதப் பெருவிழா

Roc.No.A2/973/2022 Dated.14.11.2023

E-Tender For Thiruppani Second Call

Ramanathapuram District, Paramakudi Taluk, Nainarkovil Village, Arulmigu Naganathaswamy Temple under the control of Ramanathapuram Samasthanam Devasthanam 2022 - – 2023 Assembly Announcement No.108, Government Grant Rajagopuram Kalkaram Thiruppani to invite the E--Tender https://tntenders.gov.in Diwan and Administrative Secretary in Ramanathapuram Samasthanam Devasthanam for Hindu Religious Endowment Approved Sthapathys

Details

| Sl.No. | Work Details | Work Estimate including G.S.T | E.M.D. | Work Duration | Qualification of Participate the Tender |
|---|---|---|---|---|---|
| 1. | Contruct the Swamy Sannathi Five Tire Rajagopuram upto Kalkaram | Rs.1,34,91,818/- | Rs.82,000/- Pay through Online | 18 Months | Hindu Religious & Charitable Endowment Department approved Sthapathys |

1) Above Work Details, Tender Advertisement and Tender Document to contact the website https://tntenders.gov.in (2) Tender Document Downloaded through online 20.11.2023 To 04.12.2023 Evening 5.00 P.M. (3) Fulfil Tender Documents are upload 05.12.2023 Evening 5.00 P.M. through online (4) Tender to Opened 06.12.2023 Morning 11.00 A.M., through online.

**(Sd/–)K.PALANIVEL PANDIAN,**
**Diwan and Administrative Secretary**
**Ramanathapuram Samasthanam Devasthanam**
**Ramanathapuram**

## ஓ.பி.எஸ். மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

சென்னை, நவ. 16–

ஓ. பன்னீர்செல்வம் மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

அண்ணா தி.மு.க. பெயர், கொடி மற்றும் சின்னத்தை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்த தடைவிதிக்கக் கோரி எதிர்க்கட்சி தலைவரும் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி சதிஷ்குமார் முன்பு கடந்த 7ஆம் தேதி நடைபெற்றது.

அப்போது, கட்சியில் இருந்து நீக்கப்பட்டும் அதே பதவியை ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்தி வருகிறார் என எடப்பாடி பழனிசாமி தரப்பில் வாதிடப்பட்டது. இதையடுத்து அண்ணா தி.மு.க. பெயர், கொடி, சின்னம் ஆகியவற்றை பயன்படுத்த ஓ.பன்னீர்செல்வத்திற்கு இடைக்கால தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு ஐகோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது தனி நீதிபதி உத்தரவின் சான்றளிக்கப்பட்ட நகல் இல்லாமல் எண்ணிட்ட பதிவுத் துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டு மேல்முறையீட்டு வழக்கின் விசாரணையை வியாழக்கிழமைக்குத் தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

மேலும் இடைக்கால தடை விதிக்கப்பட்டதால் செயல்பட முடியாத நிலை உள்ளதால் இன்றே விசாரிக்க வேண்டும் என ஓபிஎஸ் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதற்கு நீதிபதிகள் நாளை முதல் வழக்காக விசாரிக்கப்படும் என்றனர். அதன்படி, ஓபிஎஸ் மேல்முறையீட்டு மனு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பின் பெயர், கொடியை பயன்படுத்துவது சரியா என நீதிபதி கேள்வியெழுப்பினார். அப்போது, தங்களது தரப்பு வாதத்தை அனுமதிக்காமல் தனி நீதிபதி இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது தவறு என்றும், பொதுக்குழு மீது சுப்ரீம் கோர்ட்டு வழங்கிய தீர்ப்பு இடைக்கால தீர்ப்பு என்றும் அது இறுதித்தீர்ப்பு அல்ல என்று ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் வாதிடப்பட்டது. இதனை தொடர்ந்து இந்த வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

## முடி வெட்டவில்லை எனக்கூறி மாணவருக்கு பிரம்பால் அடி: தலைமையாசிரியர் மீது புகார்

மதுரை, நவ. 16–

முடி வெட்டவில்லை எனக்கூறி மாணவரை பிரம்பால் அடித்த தலைமை ஆசிரியர் மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இதில் 900 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். 20க்கும் மேற்பட்ட ஆசிரியர் ஆசிரியைகள் உள்ளனர். அதே பகுதியை சேர்ந்த 15 வயதுடைய மாணவர் அந்தப்பள்ளியில் 10 ம் வகுப்பு படித்து வருகிறார். சம்பவத்தன்று வழக்கம்போல் அந்த மாணவர் பள்ளிக்கு சென்றுள்ளார். அப்போது சரியாக முடிவெட்டவில்லை எனக்கூறி பள்ளி தலைமையாசிரியர் மாணவரை கண்டித்ததாக கூறப்படுகிறது. மேலும் முட்டிக்கால் போட வைத்து மாணவரை தலைமையாசிரியர் பிரம்பால் சரமாரியாக அடித்ததாக தெரிகிறது.

இதில் மாணவரின் காலில் தழும்புகள் ஏற்பட்டன.பள்ளி முடிந்தபின் வீட்டிற்கு சென்ற மாணவர் தனக்கு நேர்ந்ததை பெற்றோரிடம் அழுதுகொண்டே கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்த அவரது பெற்றோர் மகனை திருமங்கலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். மேலும் இதுகுறித்து அவர்கள் கூறுகையில், சரியாக முடி வெட்டவில்லை எனக்கூறி மகனை அடித்தது நியாயமற்றது.

இதுகுறித்து போலீஸ் நிலையத்தில் தலைமையாசிரியர் மீது புகார் அளிக்க உள்ளோம் என்றனர்.

# விண்கல்லைச் சுற்றும் புதிரான துணைக்கோள்: நாசா அறிவிப்பு

நியூயார்க், நவ. 16–

விண்கல்லைச் சுற்றிவரும் புதிரான துணைக்கோள் ஒன்றை நாசா விண்வெளி ஆய்வு மையம் கண்டறிந்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான 'நாசா,' 2021ஆம் ஆண்டு தன்னுடைய 'லூசி' என்ற விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பியது. இதனுடைய நோக்கம் சூரியனைச் சுற்றி வரும் விண்கற்களைப் பற்றி ஆய்வது தான். இது அண்மையில் 'தின்கினேஸ்' என்று அழைக்கப்படும் ஒரு விண்கல்லின் படங்களை எடுத்து அனுப்பியது. இந்த விண்கல்லின் பிரகாசம் மாறிக்கொண்டே இருந்தது. இதற்குக் காரணம், புதிராக இதைச் சுற்றி வரும் ஒரு சிறு துணைக்கோள் தான்.

**'கான்டாக்ட் பைனரி'**

இந்தத் துணைக்கோள் இரண்டு பகுதிகளால் ஆனது. இதன் பெரிய பகுதி 790 மீட்டர் அகலம் கொண்டது, சிறிய பகுதி 220 மீட்டர் அகலம் கொண்டது. இப்படியாக ஒன்றை ஒன்று தொட்டுக்கொண்டு இருக்கும் இரு பகுதிகளாலான விண்வெளிப் பொருட்கள் பல இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெயர் 'கான்டாக்ட் பைனரி' என்பதாகும்.

ஆனால், இந்தப் பொருட்கள் புரியாத புதிராக ஒரு விண்கல்லைச் சுற்றி வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறை. இந்தத் துணைக்கோள் எப்படி உருவானது, எதனால் ஆனது என்பதெல்லாம் இன்னும் புதிராக இருக்கின்றன.



## பொதுத்தேர்வு கால அட்டவணை…

(1–ம் பக்கத்தொடர்ச்சி)

மாணவர்களுக்கு பிப்ரவரி 23ம் தேதி செய்முறைத் தேர்வு தொடங்கி 29ம் தேதி வரை நடைபெறுகிறது. 11ம் வகுப்பு மாணவர்களுக்கு பிப்ரவரி 19ம் தேதி தொடங்கி 24ம் தேதி வரை நடைபெறுகிறது. பிளஸ்–2 செய்முறைத் தேர்வு பிப்ரவரி 12ல் தொடங்கி பிப்ரவரி 17–ந்தேதி வரை நடைபெறுகிறது.

**தேர்வு முடிவுகள் எப்போது?**

10–ம்வகுப்புக்கு மே10ம்தேதி தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகிறது. 11ம் வகுப்புக்கு மே 14ம் தேதியும், பிளஸ்–2 மாணவர்களுக்கு மே 6ம் தேதியும் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன.

10–ம், 11–ம் மற்றும் 12–ம் வகுப்பு தேர்வுகள் காலை 10 மணிக்கு துவங்குகிறது. கேள்வி தாள் படிப்பதற்காக 10 நிமிடங்களும், தேர்வர்கள் விவரங்களை சரிபார்க்க 5 நிமிடங்களும் வழங்கப்படுகின்றன. தேர்வுகள் பகல் 1.15 மணிக்கு நிறைவடைகிறது.

**10–ம் வகுப்பு**

தமிழ் –26.3.2024
ஆங்கிலம் – 28.3.2024
கணிதம் – 1.4.2024
அறிவியல் – 4.4.2024
சமூக அறிவியல் – 8.4.2024

**11–ம் வகுப்பு**

மொழிப் பாடம் –4.3.2024
ஆங்கிலம் – 7.3.2024
இயற்பியல், பொருளாதாரம், கணினி தொழில்நுட்பம் – 12.3.2024
புள்ளியியல், கணினி அறிவியல் – 14.3.2024
உயிரியல், தாவரவியல், வரலாறு, வணிக கணிதம் – 18.3.2024
வேதியியல், கணக்குப்பதிவியல், புவியியல் – 21.3.2024
கணிதம், விலங்கியல், வணிகவியல் – 25.3.2024

**12 ம் வகுப்பு**

மொழிப் பாடம் – 1.3.2024
ஆங்கிலம்– 5.3.2024
கணினி அறிவியல், உயிரி–அறிவியல், புள்ளியியல் – 8.3.2024
வேதியியல், கணக்குப் பதிவியல், புவியியல்– 11.3.2024
இயற்பியல், பொருளாதாரம், கணினி தொழில்நுட்பம் – 15.3.2024
கணிதம், விலங்கியல், வணிகவியல், நுண் உயிரியல்– 19.3.2024
உயிரியல், தாவரவியல், வரலாறு, வணிகக் கணிதம், புள்ளியியல் – 22.3.2024

**கோவில் திருவிழா தகராறில் முன் விரோதம்**

# டிரைவரை கொலை செய்து பாலாற்றில் உடல் புதைப்பு: 4 நண்பர்கள் கைது

திருப்பாற்கடல், நவ. 16–

டிரைவரை கொலை செய்து பாலாற்றில் உடலை புதைத்த நண்பர்கள் 4 பேரை போலீசார் கைது செய்தனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் திருப்பாற்கடல் அருகே உள்ள அத்திப்பட்டு கிராமம், காமராஜர் தெருவை சேர்ந்தவர் இளவரசன் (வயது 27), டிரைவர். இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இந்த நிலையில் இளவரசன் கடந்த 6ந்தேதி வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார். அவர் மீண்டும் வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தேடியும் அவர் கிடைக்கவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த இளவரசனின் தாய் செல்வி (55) காவேரிப்பாக்கம் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் இளவரசனை பீர் பாட்டிலால் குத்தி கொலை செய்து உடலை பாலாற்றில் புதைத்ததாக, 4 பேர் வாலாஜா போலீசில் சரணடைந்தனர். அவர்களை கைது செய்தனர். அத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த இளவரசனும், லோகேஷ் என்கிற லாலு (27), பூவரசன் (24) , வாசுதேவன் (27), அருண்குமார் (33), ஆகியோர் நண்பர்கள். கடந்த ஜனவரி மாதம் நடந்த மயிலாறு திருவிழாவின் போது இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இது தொடர்பாக இவர்களுக்கிடையே முன்விரோதம் இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 6ந் தேதி இரவு லோகேஷ் மற்றும் அவரது நண்பர்களான பூவரசன், வாசுதேவன், அருண்குமார் ஆகியோர் ஒன்றாக அமர்ந்து மது அருந்தினர்.

அப்போது அந்த வழியாக வந்த இளவரசனை, 4 பேரும் வழிமறித்து தகராறு செய்தனர். இவர்களுக்குள் வாக்குவாதம் முற்றியதில், ஆத்திரமடைந்த லோகேஷ் மற்றும் அவரது நண்பர்கள் 3 பேரும் சேர்ந்து பீர் பாட்டிலால் இளவரசன் தலையில் அடித்தனர். உடைந்த பீர் பாட்டிலால் வயிறு மற்றும் பல இடங்களில் குத்தியும் கொலை செய்தனர்.மேலும் போலீசிடம் மாட்டிக் கொள்ளாமல் இருக்க அத்திப்பட்டு பாலாற்றிலேயே குழி தோண்டி இளவரசன் உடலை புதைத்து விட்டு வீட்டுக்கு சென்று விட்டனர்.

காணாமல் போன இளவரசனை போலீசார் தேடுவதை அறிந்த அவர்கள் போலீசில் நிலையத்தில் சரண் அடைந்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம். முழுமையாக விசாரணை நடத்திய பிறகே கொலை செய்ததற்கான காரணம் தெரியும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

ராணிப்பேட்டை போலீஸ் சூப்பிரண்டு கிரண் சுருதி மற்றும் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு விஸ்வேஸரய்யா ஆகியோர் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினர். பாலாற்றில் இளவரசன் உடல் புதைக்கப்பட்ட இடத்தை கண்டறிந்து வருவாய்த்துறை மற்றும் மருத்துவ குழு முன்னிலையில் பிணத்தை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை செய்யும் பணியில் ஈடுபட்டனர்.மேலும் கிராமத்தில் அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் இருக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 100க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.

## திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பதவியிலிருந்து திருப்பூர் சுப்பிரமணியம் 'திடீர்' விலகல்

கோவை, நவ 16–

திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர் பதவியிலிருந்து திருப்பூர் சக்தி பிலிம்ஸ் அதிபர் சுப்பிரமணியம் திடீரென்று விலகினார்.

இவரது திரையரங்கத்தில் தீபாவளி (12ந் தேதி) அன்று காலை அனுமதியின்றி படங்களை திரையிட்டதாக மாவட்ட கலெக்டர் நோட்டீஸ் அனுப்பியிருந்தார் இந்நிலையில் தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் மற்றும் கோவை ஈரோடு நீலகிரி, திருப்பூர் மாவட்ட திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் தலைவர் பொறுப்பில் இருந்து தான் விலகுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து நிருபர்களிடம் சக்தி பிலிம்ஸ் சுப்பிரமணியம் கூறியதாவது:–

''இந்தி திரைப்படத்துக்கு அரசின் உத்தரவு பொருந்தாது என நினைத்து காலை சிறப்பு காட்சியை ஒளிபரப்பிவிட்டனர், எங்கள் திரையரங்கத்தில்.

நானும் மனிதன் தான் .100% தவறில்லாமல் இருக்க முடியாது. 10% தவறு இருக்கதான் செய்யும். இந்நிலையில் நல்ல பெயருடன் வெளியே செல்ல முடிவெடுத்து வெளியேறுகிறேன். சாதாரண விஷயத்தை இவ்வளவு பெரிது படுத்தி இருப்பதால் வெளியேறுகிறேன்.

ஒரு வருஷத்துக்கு முன்னமே என் மகன்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டேன். எங்களின் ஐடி டீம் சட்டத்தை சரியாக புரிந்துகொள்ளவில்லை. சிறப்பு காட்சி தொடர்பாக ஜப்பான், ஜிகர்தண்டா 2 படத்துக்கு சிறப்பு காட்சி தொடர்பாக விதிமுறைகள் அறிவிக்கப்பட்டன. ஆனால் ஹிந்தி படத்துக்கு அது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அதனால் திரையிட்டு விட்டனர். நான் அதற்கு பொறுப்பேற்கிறேன்''.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>உத்தரப் பிரதேசம் அருகே</u>

# டெல்லி – சஹர்சா வைசாலி விரைவு ரெயிலில் தீ விபத்து: 19 பேர் காயம்

எட்டாவா, நவ. 16–

உத்தரப் பிரதேசம்மாநிலத்தின் எட்டாவா அருகே டெல்லி – சஹர்சா வைசாலி அதிவிரைவு ரெயில் பெட்டி ஒன்றில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

தீ விபத்துக்குள்ளான ரெயில் டெல்லியில் இருந்து பிகாரின் சஹர்சாவுக்கு சென்று கொண்டிருந்தது. அந்த ரெயில் இன்று அதிகாலை 2.12 மணிக்கு உத்தரப் பிரதேசத்தின் எட்டாவாவை நெருங்கிக் கொண்டிருந்த போது, ரெயிலின் எஸ்.6 பெட்டியில் இருந்து புகை வந்ததைப் பார்த்த பயணிகள் சிலர் ரெயிலில் இருந்து ஊழியர்களுக்கு தகவல் அளித்தனர். அதனைத் தொடர்ந்து ரெயில் மெயின்பூரி சந்திப்புக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

ரெயில்வே போலீசார் (ஜிஆர்பி) மற்றும் ரெயில்வே பாதுகாப்பு படை (ஆர்பிஎப்) போலீசாரின் ஒரு மணிநேர தீவிர முயற்சிக்கு பின்னர் தீ அணைக்கப்பட்டது. தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பெட்டி தனியாக பிரித்தெடுக்கப்பட்ட பின்பு காலை 6 மணிக்கு விரைவு ரெயில் மீண்டும் அதன் பயணத்தைத் தொடங்கியது.

உள்ளூர் அதிகாரிகளின் தகவலின்படி, இந்தத் தீ விபத்தில் 19 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 11 பேர் மேல்சிகிச்சைக்காக சாய்பை மருத்துவப் பல்கலைகழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். விபத்துக்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதுகுறித்து ஆக்ரா ஜிஆர்பி காவல் கண்காணிப்பாளர் ஆதித்யா லங்கேஸ் கூறுகையில், "இந்த விபத்தில் உயிரிழப்புகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை. காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தீவிர விசாரணைக்கு பின்னர் இத்தீவிபத்துக்கான காரணம் குறித்து தெரிய வரும் என்று தெரிவித்தார்.

முன்னதாக நேற்று மாலை 5.30 மணிக்கு புதுடெல்லி – தர்பாங்கா சிறப்பு விரைவு ரெயிலில் ஏற்பட்ட தீ விபத்தில் 8 பயணிகள் காயமடைந்தனர். 3 பெட்டிகள் சேதமடைந்தன. உத்தரப் பிரதேசத்தின் எட்டாவா அருகே 10 மணிநேரத்துக்குள் 2 ரெயில்கள் தீ விபத்துக்குள்ளானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## நாகர்கோவில் அருகே காரில் கடத்தி வந்த ரூ.10 கோடி திமிங்கலம் எச்சம் பறிமுதல்: 4 பேர் கைது

நாகர்கோவில், நவ. 16–

நாகர்கோவில் அருகே காரில் கடத்தி வந்த ரூ.10 கோடி மதிப்பிலான திமிங்கலம் எச்சத்தை பறிமுதல் செய்த வனத்துறை அதிகாரிகள் 4 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அம்பர் கிரிஸ் எனப்படும் திமிங்கல எச்சம் வாசனை திரவியங்கள் மற்றும் மருந்து பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. அரசால் தடை செய்யப்பட்ட திமிங்கல எச்சத்தை சிலர் கடத்தி கொண்டு சென்று கள்ளச்சந்தையில் விற்பனை செய்து வருகிறார்கள். இந்நிலையில் நாகர்கோவில் பகுதியில் அம்பர் கிரிஸ் விற்பனை செய்யப்படுவதாகவும், சிலர் கடத்தி கொண்டு வருவதாகவும் வனத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து வனத்துறையினர் நேற்று இரவு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது காரில் வந்த ஒரு கும்பலை வனத்துறையினர் பிடித்தனர். அந்த காரில் 4 பேர் இருந்தனர். அவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்கள் முன்னுக்கு பின் முரணான தகவல்களை தெரிவித்தனர். இதனால் அவர்களது காரை வனத்துறையினர் சோதனை செய்தனர்.அப்போது அவர்களது காரில் அம்பர் கிரிஸ் கடத்தியது தெரியவந்தது. காரில் இருந்த 11 கிலோ அம்பர் கிரிசை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் பறிமுதல் செய்யப்பட்டது.

காரில் இருந்த 4 பேரையும் வனத்துறையினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்கள் நெல்லை மாவட்டம் முன்னீர்பள்ளத்தைச் சேர்ந்த நாராயணன் (வயது41), மேலப்பாளையத்தைச் சேர்ந்த அருணாச்சலம் (53), வேலாயுதம் (47), நாங்குநேரியைச் சேர்ந்த சுந்தர் (25) என்பது தெரியவந்தது. நெல்லையிலிருந்து நாகர்கோவிலுக்கு அம்பர் கிரிசை விற்பனைக்காக கடத்தி கொண்டு வந்திருக்கின்றனர். அது தொடர்பாக அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. பறிமுதல் செய்யப்பட்ட அம்பர் கிரிசின் மதிப்பு ரூ.10 கோடி என்று கூறப்படுகிறது.

## கிணற்றில் நீச்சல் பழகச் சென்ற கணவன், மனைவி பரிதாப பலி

நாமக்கல், நவ. 16–

கிணற்றில் மனைவிக்கு நீச்சல் பழக்கிவிட சென்றபோது, கணவன், மனைவி இருவரும் நீரில் மூழ்கி இறந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே உள்ள, பன்னீர்குத்திபாளையம் அண்ணா நகர், சங்கங்காடு பகுதியைச் சேர்ந்தவர்கள் சோமசுந்தரம் (வயது 35) இவரது மனைவி மகேஸ்வரி (வயது 25). இவர்கள், நேற்று பிற்பகலில் வீட்டுக்கு அருகே உள்ள விவசாயக் கிணற்றில் மனைவிக்கு நீச்சல் பழக்கிவிட சென்ற போது, எதிர்பாராத விதமாக இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

முன்னதாக நீச்சல் பழக செல்கிறோம் என வீட்டில் மகனிடம் கூறிவிட்டு சென்றவர்கள், நீண்ட நேரம் ஆகியும் வராததால் கிணற்றில் சென்று தேடிய போது, மகேஸ்வரியின் உடல் மிதந்த நிலையில் இருந்தது. பின்னர் இதுகுறித்து, தகவல் அறிந்த அக்கம் பக்கத்தினர் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர்.

**கணவன், மனைவி உடல்கள் மீட்பு**

இதனையடுத்து தீயணைப்பு நிலைய அலுவலர் குணசேகரன் தலைமையில், விரைந்து வந்த போலீசார், கிணற்றில் இறங்கி மிதந்து கொண்டிருந்த மகேஸ்வரியின் உடலை மீட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் கணவனின் உடலை தேட முயன்ற போது கிணற்றில் 30 அடிக்கு மேல் தண்ணீர் இருந்ததால் தேட முடியாத நிலை ஏற்பட்டது. எனவே, மின் மோட்டார்கள் வைத்து சுமார் 4 மணி நேரம் கிணற்று நீர் முழுவதையும் இரைத்தனர். பின்பு, கிணற்றின் அடிப்பகுதியில் இருந்த சேற்றில் சிக்கி, இறந்து போன கணவன் சோமசுந்தரத்தின் உடலை தீயணைப்பு துறையினர் மீட்டனர். இச்சம்பவம் குறித்து திருச்செங்கோடு ஊரக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இறந்து போன மகேஸ்வரிக்கு, சோமசுந்தரம் 2வது கணவர் என்றும் முதல் கணவரை பிரிந்து 8 வயது ஆண் குழந்தை மற்றும் ஜீவிதா என்ற 4 வயது பெண் குழந்தையுடன் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு சோமசுந்தரத்தை திருமணம் செய்து, இதே பகுதியில் வசித்து வந்தது போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# குடும்ப தகராறு: கணவரை அடித்துக் கொன்ற மனைவி கைது

போடி, நவ. 16–

குடும்ப தகராறில் கணவரை அடித்து கொலை செய்த மனைவியை போலீசார் கைது செய்தனர்.

தேனி மாவட்டம் போடி ஜீவாநகரை சேர்ந்த கருப்புச்சாமி மகன் ரமேஷ் (வயது 47). இவருக்கும் கிருஷ்ணவேணி (35) என்பவருக்கும் கடந்த 19 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 1 மகனும், 1 மகளும் உள்ளனர். ரமேசுக்கு சொந்தமாக கேரள மாநிலம் உடும்பன் சோலையில் ஏலக்காய் தோட்டம் உள்ளது. அவ்வப்போது அங்கு சென்று விவசாய பணிகளை கவனித்துவிட்டு வருவது வழக்கம்.

இதனிடையே கணவன், மனைவியிடையே குடும்பத்தில் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. நேற்று ரமேஷ் தனது வீட்டில் தற்கொலைக்கு முயன்றதாகவும், தான் அவரை காப்பாற்றியதாகவும் கூறி உயிருக்கு ஆபத்தான நிலையில் கிருஷ்ணவேணி தனது கணவரை போடி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ரமேஷ் பரிதாபமாக உயிரிழந்தார்.

அவரது கழுத்து, மூக்கு, தோள்பட்டை உள்ளிட்ட இடங்களில் ரத்த காயங்கள் மற்றும் நகக்கீறல்கள் இருந்தது. மேலும் அவரது மர்ம உறுப்பிலும் பலத்த காயம் இருந்தது. இதனால் போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதன்பேரில் கிருஷ்ணவேணியை இன்ஸ்பெக்டர் ராமலட்சுமி தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தியதில் திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

எனது கணவர் தினமும் செக்ஸ்தொல்லை கொடுத்து வந்தார். ஏற்கனவே 2 குழந்தைகள் இருப்பதால் நான் அதற்கு மறுத்து வந்தேன். இருந்தபோதும் அவரது தொல்லை நிற்கவில்லை. சம்பவத்தன்றும் என்னிடம் உறவுகொள்ள முயன்றபோது அவரை தாக்கி கீழே தள்ளினேன். மேலும் அவரை அடித்து தள்ளியதில் உடலில் காயங்கள் ஏற்பட்டது. அதன் பிறகும் ஆத்திரம் அடங்காமல் மர்ம உறுப்பில் மிதித்து கொலை செய்தேன்.

அக்கம் பக்கத்தினரை நம்ப வைக்க அவர் தூக்கு போட்டதுபோல செட்டப் செய்தேன். இருந்த போதும் உடலில் காயங்கள் இருந்ததால் என்னால் தப்பிக்க முடியவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து ரமேசின் தாய் அழகம்மாள் கொடுத்த புகாரின் பேரில் கிருஷ்ணவேணியை போலீசார் கைது செய்தனர்.


**BEFORE THE Ith CITY CIVIL COURT AT CHENNAI**
**O.S.No.5056/2021**

Bank of Baroda,
Saidapet Branch
Rep. by its Chief Manager Abdul Razack 1st Street, AGS Towers, 1st Floor, Saidapet,
Chennai-600 015 –Plaintiff
Vs
Mr.Karuppaiyan and another ...Defendants

To
1.Mr.Karuppaiyan
S/o Muniyappan,
Door No 60, Jothi Amman Nagar, Saidapet
Chennai – 600 015.
2. Mrs.Vasantha
Door No 60, Jothi Amman Nagar, Saidapet
Chennai – 600 015.

Take notice that in O.S.No.5056/2021 filed by Bank of Baroda, Saidapet Branch against you both for recovery of a sum of Rs.2,31,967.93/- together with interest @ 10.25% per annum with monthly rests from the date of Plaint till the date of realization, the Hon'ble Judge, Ith Asst.City Civil Court on 20.10.2023 had ordered paper publication to you and posted the matter to 21.12.2023. Therefore you are hereby called upon to appear before the 1th Asst. City Civil Court on 21.12.2023 failing which the maKer will be decided in your absence.

Vijayalakshmi.M
Counsel for Plaintiff



**மார்க் ப்ராஜக்ட்ஸ் அன்ட் இன்பிராஸ்டிரக்சர் லிமிடெட்**

CIN: L65991TN1993PLC025252

பதிவு அலுவலகம் : ஸ்ரீ சாய் சுபோதயா அபார்ட்மெண்ட்ஸ், தரை தளம், எண்.57/2பி, கிழக்கு கடற்கரை சாலை, திருவான்மியூர், சென்னை – 600 041
Phone No: +917825888141 | Email ID : mpil@marggroup.com | Website: www.margprojects.com

**30.09.2023–ல் காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | |
|---|---|---|---|---|
| | | 30.09.2023ல் முடிந்த 3 மாதங்கள் | 30.09.2022ல் முடிந்த கடந்த ஆண்டு இதே 3 மாதங்கள் | 31.03.2023ல் முடிந்த முந்தைய ஆண்டு |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (நிகரம்) | - | - | - |
| 2 | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | (1.28) | (1.32) | (4.11) |
| 3 | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (1.28) | (1.32) | (4.11) |
| 4 | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | (1.28) | (1.32) | (4.11) |
| 5 | காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருவாய் (வரிக்கு பின்) | (1.28) | (1.32) | (4.11) |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 544.50 | 544.50 | 544.50 |
| 7 | நடப்பு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள மற்ற ஈக்விட்டி | 1,021.04 | 1,025.04 | 1,023.15 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/– ) | | | |
| | (a) அடிப்படை (ரூ.) | (0.04) | (0.02) | (0.08) |
| | (b) பலமிழந்தது (ரூ.) | (0.04) | (0.02) | (0.08) |

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ் இணையதளம் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் margprojects.com–ல் உள்ளது.

மார்க் ப்ராஜக்ட்ஸ் அன்ட் இன்பிராஸ்டிரக்சர் லிமிடெட்டிற்காக
செல்வபாண்டி
தலைவர்
DIN No : 08709432

இடம் : சென்னை
நாள் : 15.11.2023